தோற்றுவித்த வாழும் வரலாறே! வரலாற்றுப் பெட்டகமே! சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வறியவருக்கும், எளியவருக்கும் மாதம் ரூபாய் 1,000 அள்ளி வழங்கிய அட்சயப் பாத்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமைப் பொருந்திய தமிழ்த் திருநாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம், எங்கள் குடும்ப தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதம் வணங்குகிறேன். வினாத் தொடுத்து விடை அவைக்கு வருவதற்கு முன்பே, பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்னம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆலத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டத்தைத் தோற்றுவித்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

178—

நிலம் ஒப்படைத்தல்

***10722—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்திமலை அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயிலுக்கு 50 ஏக்கர் வன நிலத்தை ஒப்படைப்புச் செய்யும் பணியை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்திமலை, அருள்மிகு

அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில் பக்தர்களின் வழிபாட்டிற்குப் பயன்படுத்த 50 ஏக்கர் வன நிலம், நில அளவைக் குழுவினரால் நில அளவை மேற்கொள்ளப்பட்டது. இந்நில அளவை வரைபடம் அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் கோயில் நிருவாகத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேற்கண்ட வன நில உரிமை தொடர்பாக அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண் 17185/2007–ல் வழக்கு தொடுத்துள்ளார். அவ்வழக்கு நிலுவையில் உள்ளது. நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்கப் பெற்றவுடன், தீர்ப்புரையின் அடிப்படையில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் ஆனைமலை காப்புக் காட்டிலிருந்து பக்தர்களின் வழிபாட்டிற்காக 50 ஏக்கர் நிலம் வனத் துறையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது சம்பந்தமாக இந்து சமய அறநிலையத் துறைக்கு அளந்து ஒதுக்கீடு செய்து தர வேண்டி உயர் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்று தெரிவித்தார்கள். ஏற்கெனவே அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் ஆலயத்தின்பேரிலே இருக்கக்கூடிய அந்த நிலமானது ஆங்கிலேயர் காலத்திலேயே செப்புப் பட்டயம் பெற்ற இடமாகும். உயர் நீதிமன்றத்தின் மூலமாகத் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, வனத் துறை அதிகாரிகளோடு விசாரணை செய்யப்பட்டு, அதன்மூலமாக ஒரு கருத்துரு உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

முற்பகல் 11–10

இந்தச் சூழ்நிலையிலே உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அந்த வழக்கை, வனத் துறையும், இந்து சமய அறநிலையத் துறையும் இணைந்து முடித்துக் கொடுத்தால், திருக்கோயில் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்கும், அங்குவரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்கும், பக்தர்களுக்கும், அங்கு இருக்கக் கூடிய நீர்வீழ்ச்சிக்குச் செல்லவும் உறுதுணையாக இருக்கும். இதுகுறித்து

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இரு துறை அதிகாரிகளின் மூலமாக வழிவகுத்து, நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய அந்த வழக்கை விரைவில் முடித்துத் தருவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்து தருவார்களா என்று தங்கள்மூலமாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, வழக்கை விரைவுபடுத்தி, அதனை விரைவிலே முடித்து, அந்தக் கோயிலின் வழிபாட்டிற்கு உரிய ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்த வழக்கைத் துரிதமாக முடித்துத் தருவேன் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

179—

இலவச சிகிச்சை

***34394—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், மண்டபம், பாம்பன் பேரூர் பகுதிகளில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச சிகிச்சை அளிக்க அரசு முன்வருமா?